உ

# ராஜ நாதம்



மேல் கரவையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும்
அமரர் பரமேஸ்வரி துரைராஜா அவர்ளின் அன்புக் கணவரும்,
அண்ணாவியார் புதியார் வளவினைச் சேர்ந்த

## அமரர் V. K. துரைராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு வெளியீடு

**10.11.2009**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Vathiry S. Raveendran

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தோற்றம்

18 - 07 - 1922



மறைவு

11 - 10 - 2009

# அமரர் V. K. துரைராசா

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விரோதிதன்னில் ஆனபுரட் டாதியிலே
பூண்ட அபரபக்க அட்டமியாம் - மாண்புடைய
கான கலாதரன் கரவையூர் துரைராசா வானுலகு
சென்றடைந்த நாள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவையூரின் அமரதீபம்

கலைகளின் உறைவிடம் கரவையூர்:அவ்வூர்
மழலைகள் வாயும் இசை பயிலும் பரதமும் பண்ணும்
பல்லியவோசையும் துயிலெழுப்ப.
அவ்வூர் சிலிர்ப்படையும்.

இப்பதி செய்த ஒப்பரும் தவத்தால்
இணையிலா நாதஸ்வர இசைவல்லோன்
கானகலாதரன் கரவைதுரைராசா
தோன்றியனன்; புகழ் தோய்ந்தனன்.

கன்னலோ? கனிச்சாறோ? தேனோ? கற்கண்டோ?
என்ன உண்டு இவனிசைக்கு ஈடு? ஆலாபனையில் அவன்தன்னை
மறக்க ஆடாத தலைகளும் ஆடும் . சுரங்களைச் சுரக்க
தொளைகளில் அவன்கை விரல்விளையாட ,
போடாத கைகளும் போட்டிடும் தாளம்
ஞானமில்லானும் அவனிசை ஈர்ப்பால் ஞானஸ்தன் ஆவான்!

சப்தசுரங்கள் சித்துக்கள் காட்ட
நிசப்தம் பிறக்கும்.
அவனிசை மட்டும் தனியரசாளும். ஆளுகை முடிவில்
கரவொலி மட்டும் காதைப் பிளக்கும்.

கானகலாதரனை காலனா அழைத்தான்?
இல்லை இல்லை. வெற்றுயிர் மட்டும் அவன்கைப்பட்டது.
விண்ணிலும் மண்ணிலும் கர்ணங்களிலும் விரவிடும் அவனிசை
அமரகீதம். கரவையூர் துரைஜி அமரதீபம்!

- புத்தூர் வே. இளையகுட்டி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதமழையே நம்துரைராசாவே!

நாதமழையே நம்துரைராசாவே
கான இசையதனை நாத நரம்புகளால்
ஞான இசை மழையாய் நமக்கு தந்தவனே!
கானகலாதரனாய் நாதஸ்வர ஓசையினால்
நம்மை மயக்கியோனே!
மகுடியாய் நீ நின்று எமை
மயங்கவே வைத்தாயே!
அண்ணாவி புதியார் வளவின் அ
ருங்கொடையே! துரைராசா:
என்னாளும் உன்கலையை
நாம் மதித்தோம்!
உன் இசைத்திறனுக்கும்
ராக லய சுருதிக்கும் - நீ
பிறக்கும் இடத்தில் பிறந்திருந்தால்
உனை நாடி தேசிய விருதுகளும்
பட்டங்களும் தேடி வந்திருக்கும்.
நீ எமக்குள் பிறந்ததினால்
துரையாக இருந்துவிட்டாய்!

நீயொரு வித்துவக்கிறுக்கன்
நினைத்ததை சாதிப்பவன்
உன்இசையில் நனைந்து
மயங்கியோர் பலர்!
அவர்களை முகம் மலரவைத்தோன். நீ!

தங்களையே தாங்கள்
புகழும் காலமதில்
உந்தன் திறமைகளை
ரசனையாளர்கள்
புகழக்கேட்டோம்!
இசை வாரிசுகளுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் கற்பித்த ஆசான் நீ!
ஆலய நிகழ்வுகள்
மங்கள நிகழ்வுகளில்
உன் நாதஸ்வர இசை.
ஒலித்த நாட்கள்.......
வானொலிகலைஞர்களாக
குண்டுமணி- துரைராசா சகோதரர் என
பெயர் கேட்ட நாங்கள் சிறுவர்களானாலும்
இரவு நேரம் விழிப்பிருந்து கேட்டிருந்தோம்!
உன் நாத இசையில்
நாக பாம்பு நர்த்தனமிடப்பார்த்த நிகழ்வுண்டு.
அதற்கு சாட்சிகளும் உண்டு.
திரித்துக் கூறுவதில்
எனக்கு உடன்பாடில்லை!

உனது வரலாறு பதிவாகி உள்ளதா?
காலங்கடந்தால் வரலாற்றையே
மாற்றும் யுகமிது! நாதஸ்வரம் மட்டுமல்ல - வயலின்
,புல்லாங்குழல் ஆர்மோனியம் என
உன் விரல்கள் நாதம் சேர்க்கும்.
அச்சுவேலியில் தான் உன் முதல் அரங்கம்
அச்சுவேலி தான் உன் இறுதி அரங்கும் நிகழ்ந்தது.
அச்சுவேலியே உன்னை
வழியனுப்பி வைத்த பெருமையையும் பெற்றது.

கானகலாதரனே உன் நாதம் மழைக்கு
தலை வணங்குகிறேன்
உன்புகழ் உன்னோடு மறையாது
உன்வாரிசுக்ள் உன்பரம்பரைகள்- கலையோடு வாழுமட்டும்
உன் பெயர் நின்று நிலைக்கும்

கொழும்பிலிருந்து
**வதிரி- சி. ரவீந்திரன்**
(தேசியநாடகசபை உறுப்பினர் இலங்கை கலைக்கழகம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதஸ்வர கானகலாதரன்
## ஆத்மா சாந்தியடைவது....

11.10.2009 அன்று வடமராட்சியில் நாதஸ்வர மேதை அமரர்.V.K.துரைராசா தனது 87 ஆவது வயதில் கலையாக வாழ்வை நீக்கி அமரரான செய்தியை அறிந்து வருந்தினேன்

இலங்கையில் இருந்து இந்தியா செல்வதற்கான கடவுச்சீட்டு தேவையில்லாத காலத்தில் தென் இந்தியாவிலுள்ள சுண்ணாம்புப்பட்டித்தெரு தஞ்சாவூரில் அக்காலத்தில் வாழ்ந்த நாதஸ்வரக் கலைஞர் குருசாமி என்பவரிடம் நாதஸ்வரக்கலையைப் பயின்றதாக அவர் கூறியதை அறிந்தோம்.

ஆலயங்களிலும் மங்களவைபவங்களிலும் நாதஸ்வர, தவில் கலையில்லாமல் இருக்காது என்பதை நாமறிவோம். தனது சகோதரர் குண்டுமணி தவிலும் அமரர்.V.K.துரைராசா அவர்களின் நாதஸ்வரமும் 60 வருடங்களாக ரசிகர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைத்திருக்கும் என்பதை அவரது இறுதிக் காலத்தில் பழகியதிலிருந்து பிரபல நாதஸ்வர இசைக்கலைஞர்களான திரு.பாலமுருகன் , திரு.சிவகுமார் ஆகியோரது இசை வளர்ச்சிக்கு அவர் உதவியதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

கடந்த சில வருடங்களாக திரு.சிவகுமாரன் அவர்களது இல்லத்தில் இவரோடு பழகும் வாய்ப்பினைப் பெற்றேன். தனது இசை அனுபவங்கள் பலவற்றைக் கூறக் கேட்டேன்.

தனது பிள்ளைகளான வைத்தியர் திரு.துரைராஜசிங்கம் அவர்களை வயலின் கலைஞராகவும் மகள் திருமதி.யோகாம்பிகா உதயகுமார் அவர்களை வாய்ப்பாட்டு இசைக்கலைஞராகவும் ஆக்கித் தனது பரம்பரை இசைக்கலையை வளர்க்க ஆவன செய்துள்ளார். பேரப்பிள்ளைகளையும் அவ்வாறே வளர ஊக்கமளித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் திருவள்ளுவர் கூறிய
"தக்கார் தகவிலார் என்று அவரவர்
எச்சத்தால் காணப்படும்"
என்ற குறளுக்குப் பொருந்துவதாக இருப்பது பெருமைக்குரிய தாகிறது.

இவரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்தித்து இவரது குடும்பமும் ரசிகர்களும் ஆறுதலடைய இறைவனை வேண்டுவோமாக.

**ஓய்வுபெற்றபிரதிக்கல்விப்பணிப்பாளா**
**சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை.**
**பொன்னாலை சுழிபுரம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03.08.2008 அன்று இடம்பெற்ற கலைஞர் கௌரவிப்பும் பாராட்டும விழாவும்

கரவெட்டி மேற்கில் அமைந்த எமது சிறிய அழகிய கிராமத்தில் அன்றைய எமது சமகால இளைஞர்கள் யுவதிகள் அனைவராலும் மாமா என்று அன்புடன் அழைக்கப்பட்ட "கானகலாதரன" அமரர்.க.துரைராசா எனும் பெரியவருக்கு பாராட்டுவிழா நடைபெறுவதை அறிந்து மகிழ்வுற்றேன். கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அதுவும் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து தனது நாதஸ்வர A பிரிவில் முன்னோடியாக திகழ்ந்த அவருக்க நடைபெறும் விழாவில் எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

எனது சிறு பிராயத்திலிருந்தே அவரது வாசிப்பைக் கேட்க ஆரம்பித்தேன். காரணம் தினசரி, காலை, மதியம், மாலை என தலா 2 மணி நேரம் அவர் சாதகம் செய்வார். இசைத்துறையில் "அசுர சாதகம்" என்ற சொல்வார்கள். அது இதுதானோ என்பதை உணர்ந்து கொண்டேன்.

கர்நாடக இசையில் கேள்விஞானம் என்பது மிக முக்கியம். குறிப்பாக ராக ஆலாபனைக்கு நாதஸ்வரக்கலைஞர்களின் நீண்ட நேர ஆலாபனையை அடிப்படையாகக் கொண்டு ராகங்களைப் பாடலாம் துரைமாமா அவர்களின் தோடி, கல்யாணி , ஹிந்தோளம், பூர்விகல்யாணி, ஆபோகி போன்ற ராகங்கள் இன்றும் எனது காதில் ரீங்காரமிடுகிறது. இந்த ஒளி மூலம் நானும் ராகங்களைப்பாடும் முறையைப் பெற்றமை பெரும் பாக்யம் என்பது மிகையல்ல. அவரது வீட்டில் நடக்கும் சரஸ்லதி பூஜைமிக பிரமாண்டமானது.

நானும் தவறாது கலந்து கொள்வேன். 1969-1979 காலப்பகுதியில் நான் இலங்கை வானொலியில் இசை நிகழ்ச்சி தயாரிப்பாளர் 4 மாதத்திற்குகொரு தடவை ஒலிப்பதற்கு வருவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையகத்தில் சகல மரியாதையும் செய்து வழியனுப்புவேன். இவரது வாசிப்பின் தரத்தைக் கேட்ட தமிழ் நிகழ்ச்சி அதிகாரி மற்றும் தயாரிப்பாளர்கள் கலைஞர்கள் அனைவரும் எம்மையும் புகழ்வார்கள். அந்த அளவிற்கு இலங்கையிலுள்ள முன்னணி நாதஸ்வர, தவில் வித்துவான்கள் ஏற்றுக்கொண்ட ஒரேயொரு நாதஸ்வரவித்துவான் அவர் எனும் போது எமக்கு பெருமை. காரணம் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்துவரும் கலைஞர்கள் நாதஸ்வரப்பிரிவைப் பற்றி பேச்சு ஆரம்பித்தால்; துரைராசா - குண்டுமணி சகோதரர்களின் தரத்தைப் புகழ்வதும் ஒருவித பயம் கலந்த மரியாதையுடன் பேசுவதையும் பல முன்னணி வித்துவான்களுடன் பழகியவன் எனும் ரீதியில் விபரிப்பது இன்றைய இளம் தலை முறையினருக்கும் ரசிகர்களுக்கும் தெரிந்துகொள்ளப்பட வேண்டிய விடயமாகும். யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்கள், திருமணவிழாக்கள் , மங்கள விழாக்களிலும் துரைராசா-குண்டுமணி சகோதரர்களின் மங்கள இசை பல தசாப்தங்களாக ஒலித்தது.

எமது கிராமத்தில் சைவ நெறிக்கழகம் "கானகலாதரன" எனும் பட்டத்தை 1960களில் வழங்கிய போது கரவோசை மூலம் எமது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்தோம்.

தான்மட்டும் வாசிக்காது பல சிஷ்யர்களையும் தயார் செய்து தன்னுடன் வாசிக்கவைத்தவர். மிகக் கண்டிப்புடன் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து சிறந்த ஆசான் குருநாதர் என்று பெயரையும் பெற்றவர். இவர்களது சிஷ்ய பரம்பரையினர் தங்களது குருநாதருக்கு எடுக்கும் விழாவில் நேரில் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் வாழ்த்து செய்தி மூலம் எனது மரியாதையை தெரிவித்துக் கொள்கிறேன். துரைமாமா அவர்கள் மேலும் பல்லாண்டுகாலம் நாத ஒலியுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

"சங்கீதவித்வான" **A.K.**கருணாகரன்
(முன்னால் இலங்கை வானொலி இசை தயாரிப்பாளர்,
யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கழகம், சிங்கப்பு'ர் நுண்கலைக்கழகம்,
மட்டக்களப்பு பல்கலைக்கழக நுண்கலை விரிவுரையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதஸ்வரகானவாரிதி கானகலாதரன
## கலை இன்பமே நிலை இன்பம்

11.10.2009 அன்று அச்சுவேலியில் நாதஸ்வர மாமேதை அமரர்.V.K. துரைராசா அவர்கள் தனது 87வது வயதில் கலை உலக வாழ்வை நீக்கி அமரரான செய்தி கேட்டு அதிர்ந்து போனோம். நாதஸ்வரத்தில் தனக்கென ஓர் இடம் பிடித்த. V.K.துரைராசா அவர்கள் தான் பெற்றுக்கொண்ட பட்டங்கள் கௌரவங்கள் அனைத்திற்கும் பூரண தகுதி உடையவர். இவர் நாதஸ்வரத்தில் பிரயோகிக்கும் முறைகள் அனைத்தும் தனித்துவம் உடையது. குறிப்பாக பிருக்கா இவரிடம் உள்ளது. போல் இனி யாரிடமும் கேட்க முடியாது. அனேகமாக அவர் விரும்பி வாசிக்கும் இராகங்கள் அத்தனையும் பாரம்பரியமாக அமைந்திருக்கும் குறிப்பாக கல்யாணி, காம்போதி, தோடி, பூர்விகல்யாணி, வராளி, பைரவி போன்றவை. இவர் இலங்கை வானொலியில் தனது நாதஸ்வர இசையை நீண்ட காலமாக நிகழ்த்தி வந்துள்ளார்.

இவர்கள் இந்திய மண்ணில் தஞ்சாவூரில் சுண்ணாம்புப் பட்டித்தெரு என்னும் இடத்தில் வாழ்ந்த நாதஸ்வர மேதை குருசாமி அவர்களை குருவாகக் கொண்டு தனது நாதஸ்வரக் கலையை முறைப்படி கற்று கைதேர்ந்தவர். இவர்களைப்பற்றி எழுதுவதற்கு பக்கமொன்று போதாது. அவரை குருவாக அடைந்தது நான் செய்த பாக்கியம் என்றே கருதுகிறேன். இவருடைய இழப்பு எவராலும் ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பு. கலை உலகம் உள்ளவரை அன்னாரின் புகழ் வாழ்ந்து கொண்டே இருக்கும். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தார் அனைவருக்கும் ஆறுதல் அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**P.R.**சிவகுமார் (நாதஸ்வரம்)
வழக்கம்பரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதஸ்வரம்

இவ் வாத்தியம் முன்பு தென்னிந்தியாவிலுள்ள நாகூர்,நாகபட்டிணம் முதலிய ஊர்களில் உள்ளவர்களான, நாகசர்ப்பத்தைத் தெய்வமாகப் பூசித்த நாகர் என்ற சாதியினரால் வாசிக்கப்பட்டு வந்தது. நாகத்தின் உருவத்தைப் போன்று இவ்வாத்தியம் நீண்டிருந்ததன் காரணமாகவும் நாகசுரம் என்னும் பெயர் ஏற்பட்டது. இதனுடைய இனிமையான நாதம் காரணமாக இது பிற்காலத்தில் நாதஸ்வரம் எனப்பட்டது.

சைவ ஆலயம் ஆரம்பித்த காலம் முதலே நாதஸ்வரமானது கோவில்களில் பூசைக்குகந்த வாத்தியமாகக் கருதப்பட்டு வருகிறது. நாதஸ்வரத்துக்கு பக்கவாத்தியமாக தவில் வாசிக்கப்படுகிறது. இவை மங்களவாத்திம் எனச் சொல்லப்படுகின்றன. நாதஸ்வரமானது நாயனம், நாதவாகி,நாதக்குழல் என்றும் குறிப்பிடப்படுகின்றது. பூர்வகாலத்திலிருந்து நாதஸ்வரமானது விழாக்காலங்களிலும், திருமணவைபவங்களிலும், ஊர்வலங்களிலும்,ஏனைய மங்கள வைபவங்களிலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு காற்று வாத்தியமாகும்.

வாத்தியமாகும் இவ்வாத்தியத்தின் ஓசை நீண்ட தூரம் கேட்கும் தன்மையுடையது. கும்பகோணம் கும்பேசுவரர் கோவிலிலும், ஆழ்வார் திருநகரின் கோயிலிலும் கல் நாதஸ்வரங்கள் காணப்படுகின்றன.

அமைப்பு:

நாதஸ்வரமானது "ஆட்சா" என்னும் மரத்தினால் மேலிருந்து கீழே சற்று விரிந்து செல்லக்கூடிய கூம்பு வடிவில் குழாய் போன்று அமைக்கப்பட்டிருக்கும். வாகை , சந்தணமரம் , செம்மரம், கருங்காலி ஆகிய மரங்களாலும் நாதஸ்வரத்தை ஆக்கலாம்.

நாதஸ்வரத்தில் சீவாளி , கெண்டை, உழவு அணைசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச்சில் என்னும் பாகங்கள் காணப்படுகின்றன. உழவுப் பகுதியுடன் அணைசு பொருத்துவது கழற்றிப் பூட்டக்கூடிய அமைப்பில் உள்ளது. தற்காலத்தில் பாவிக்கப்படுகின்ற நாதஸ்வரத்தின் முழு நீளம் 36" (90cm) வரையில் இருக்கும் . உழவுப்பகுதி 29"(74cm) வரையில் இருக்கும். நாதஸ்வரத்தின் மேல் நுனியில் அமைந்திருக்கும் கூம்பு வடிவான பகுதி நகவாய் எனப்படும். இதன் மேல் துவாரத்தில் கெண்டை பொருநத்திய சீவாளி செருக்கப்படும். கெண்டையாலோ சீவாளியாலோ தனித்து நின்று ஒலியெழுப்ப முடியாது. சீவாளியை நறுக்கு என்றும் அழைப்பர். நாதஸ்வரத்தின் கீழ்ப்பாகத்தில் உழவுப்பகுதி முடியும் இடத்தில் அணைசு பொருத்தப்பட்டிருக்கும். இது Rosewood எனும் மரத்தினாலானது அணைசின்மேற்பகுதி ஒடுங்கியும் கீழ்ப்பகுதி நன்கு விரிந்தும் இருக்கும் . இதன் வாய்ப்பகுதி 6'(15cm) விட்டடம் உடையது. இவ்வாறு வாய்ப்பகுதி விரிந்து இருப்பதனாலேயே நாதஸ்வர ஒலி வெகு தூரம் வரை கேட்கின்றது.

நகரவாய்ப்பகுதியிலிருந்து 18.5உஅ கீழே உழவுப்பகுதியில் ஒரே நேர்கோட்டில் அங்குலத்துக்கு (2.5உஅ) ஒன்றாக 7 சிறிய துளைகள் இடப்பட்டிருக்கும். இத்துளைகளின் மூலமே 12 ஸ்வரஸ்டதானங்களும் வாசிக்கப்படுகின்றன. 7வது துளைக்குப் பின்பு 6" (15cm) தூர இடைவெளி விட்டு அதே நேர்கோட்டில் ஒரு துவாரமும் அதனை நடுவாகக் கொண்டு இரண்டு பக்கங்களிலும் இவ்விரண்டு துளைகளும் இருக்கும்.

கொறுக்கைத்தட்டை என்பதை 2" (5cm) நீளத்திற்கு வெட்டி நெல் வேகவைக்கும் பொழுது அதனுடன் சேர்த்துப் பதமாக வேகவைத்து எடுத்துக் கிட்டிப்பலகையில் வைத்து நன்றாக நெருங்குமாறு செய்து ஈரம் உலந்த பின்பு அதன் அடிப்பாகத்தை முறுக்கிய நூலால் ஐந்தாறு சுற்று ஈறக்கிக் கட்டிச் சீவாளி தயாரிக்கப்படுகின்றது. இதை நேராக நகவாயில் பொருத்தி வாசிக்க துடியாது. சீவாளியின் ஒடுங்கிய பாகத்தினுள் பெண்டை என்ற பகுதி செருகப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெண்டை செப்புக் குழாயினாலானது. இது ஒரு இங்குல நீளமானது குழாய் கூம்பு வடிவானது. இதன் இரு நுனிகளிலும் தேங்காய் ஓட்டினாற் செய்த இரண்டு வளையங்கள் கோர்த்து வரிந்து கட்டப்பட்டிருக்கும். இதிலே சீவாளி செருகப்படும். இவடவாறான கெண்டைச் சீவாளியை நகவாயில் வைத்துக் காற்றை ஊதுவதன் மூலமே இனிய நாதம் பிறக்கின்றது.

வாசிக்கும் பொழுது உதட்டின் அழுத்தத்தினால் 6"(15cm) நீளமுள்ள தந்தத்தினால் செய்யப்பட்ட குச்சில் என்னும் கருவி உண்டு.

நாதஸ்வரத்தை விரும்பிய சுருதிக்குச் சேர்த்துக் கொள்ள முடியாது. சுருதி இவ்வாத்தியத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாதஸ்வரத்தில் திமிரி, பாரி என இரு வகை உண்டு. திகிரி எனடபது அளவிற் சிறியது. 20"வரையில் இருக்கும். இது 3-5 கட்டை சுருதியுடையது. இதை அநேகமாக பயிற்கியின் பொழுது கையாளுவர். இவ்வாத்தியத்தைக் கச்சேரிகளில் வாசிக்கும் வழக்கம் தற்போது இல்லை.

பாரி நாதஸ்வரமே தற்போது வழக்கிலுண்டு. இது 2-2 2/1 கட்டை ஸ்ருதியுடையது. இது நீண்டிருக்கும் இதன் துழு நீளம் 90உ.அ வரையில் இருக்கும். இதனையே தற்போது நாங்கள் காண்கின்றோம்.

## வாசிக்கும் முறை:

நாதஸ்வரத்தை முன்நோக்கியவாறு நேராக இரு கைகளினாலும் பிடித்து சீவாளியினூடாகக் காற்றை மென்னையாகவும் பலமாகவும் பொருத்தமான முறையிற் செலுத்தி, துளைகளில் விரல்களை வைத்துத் திறந்தும் மூடியும் ஸ்வரஸ்தானங்களைப் பேசுவித்து இனிய இசையை எழுப்புவார்கள். குரல், புல்லாங்குழலில் பேசுவது போன்று நாதஸ்வரத்திலும் 22.'. 1 ஸ்தாயி எல்லை வரையுமே வாசிக்கமுடியும். வாசிக்கும் பொழுது புல்லாங்குழலைப் போன்று இடக்கை நடு மூன்று விரல்களாலும் வலக்கையில் பெருவிரல் தவிர்ந்த ஏனைய 4 வரல்களினாலும் வாசிக்கப்படும். பெருவிரல்கள் நாதஸ்வரத்தைப் பற்றிப் பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுகிறது. மந்தரஸ்தாயி மதியமத்திலிருந்து தாரஸ்தாயி பஞ்சமம் வரை சகல வித கமகங்களுடனும் வாசிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. உதட்டின் பிடிப்பினாலும் ,காற்றை உட்செலுத்தும் முறையினாலும், விரல்கள் நுணுக்கமான அசைவினாலும் கமகங்கள் வாசிக்கப்படுகின்றன்.

எல்லா விதமான உருப்படிகளையும் நாதஸ்வரத்தில் வாசிக்கமுடியும். இராகத்தின் விஸ்தாரத்தை இவ்வாத்தியத்தின் மூலம் அறியலாம். எவ்வளவு விளம்பித காலமாயினும் , அதிதுரித காலமாயினும் அதிக சாதகத்தினால் இவ்பாத்தியத்தில் வாசிக்க முடியும்.

நாதஸ்வரத்துக்கு ஸ்ருதி வாத்தியமாக முற்காலத்தில் ஒத்து வாசிக்கப்பட்டது. தற்போது சுருதிப் பெட்டி , எலக்ரோனிக் ஸ்ருதி பாவிக்கப்படுகிறது. திருவிழாக்காலங்களில் கோயில்களில் சுவாமி வீதி உலாவிற்குப் புறப்படும் பொழுது நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹிந்துஸ்தானி சங்கீத முறையில் பருவகாலங்களுக்கும் ஏற்ப இராகங்கள் வகுக்கப்பட்டுள்ளன.**

| பருவகாலம் | இராகம் |
|---|---|
| கோடை | பைரவ் |
| மாரி | மேக் |
| இலையுதிர் | பஞ்சம் |
| முன்பனி | நாட்டைநாராயண |
| கூதிர் | ஸ்ரீ |
| வசந்தம் | வசந்த் |

இராகங்களைப் பருவகாலங்களுக்கேற்ப பிரிக்கும் முறை முதன் முதலாக நாரதரின் சங்கீத மகரந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்நாடக இசையை போன்றே ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் இராகங்கள் பின்வருமாறு வகுக்கப்படுகின்றன.

ஸம்பூர்ண இராகங்கள்
ஷாடவ இராகங்கள்
ஔடவ இராகங்கள்

ஹிந்துஸ்தான் இராகங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஹிந்துஸ்தானி சங்கீதம் | - கர்நாடக சங்கீதம் |
|---|---|
| ஸ்ரீ | - ராமப்பிரியா |
| பிலாவல் | - சங்கராபரணம் |
| கமாஜ் | - ஹரிகாம்போஜி |
| தோடி | - சுபபந்துவராணி |
| காபி | - கரகரப்பிரியா |
| ஹிந்தோள | - காமப்பிரியா |
| பைரவி | - ஹனுமத்தோடி |
| மால்கௌஸ் | - ஹந்தோளம் |
| பீம்பலாஸி | - கர்நாடக தோவகாந்தாரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பைரவ் | - மாயாமாளவை கௌளை |
| ஜோகியா | - ஸாவேரி |
| பாகேஸ்ரீ | - ஸ்ரீரஞ்சன் |
| துர்கா | - சுத்தசாவேரி |
| யமன் | - கல்யாணி |
| பூப் | - மோகனம் |
| ஜிஞ்ஜுடி | - செஞ்சுருட்டி |
| ராகேஸ்வரி | - நாட்டைகுறிஞ்சி |
| அஹிர்பைரவ் | - சக்கரவாகம் |
| பைரவி பைரவ் | - ரேவதி |
| பூபாலி தோடி | - பூளாம் |
| பூர்யா தனாஸ்ரீ | - பந்துவராளி |
| திலங் | - நாட |
| தேசஷ் | - கேதாரகௌளை |
| பூர்வி | - நடபைரவி |
| மத்மத்சாரங் | - மத்தியமாவதி |
| ஜெய்ஜெய்வந்தி | - திவிஜாவந்தி |
| கலாவதி | - வலசி |
| சுத்த கல்யாணி | - மோகனகல்யாணி |
| படதீப் | - கௌரி மனோஹரி |

❖ ❖ ❖

எனக்குத் தெய்வீக ஆசி தந்த குருவிற்கு...............

அமரர் நாதஸ்வர இசை மேதை, கானகலாதரன், கானவாரிதி

**ம.துரைராசா** அவர்கள்

மண்ணில் மங்காப்புகழ் படைத்த எனது குருவே இசைத் தாய்

பெற்றெடுத்த எனது இனியவரே! கலை இசைக்கே காவிய நாயகரே

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிக்குரியவர்கள்...

- எமது தலைவர் வாழ்ந்த காலத்தில் அரவணைத்து ஆதரித்த உள்நாட்டிலும், பிறநாட்டிலும் வதியும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்
- வேண்டிய உதவிகளை காலத்தினால் அறிந்து செய்தவர்கள்
- அமரர் வைத்தியசாலையில் இருந்த வேளையில் உதவியவர்கள், மருத்துவர்கள்
- தொலைபேசிமூலம் துயர்பகிர்ந்து ஆறுதல் தந்த இதயங்கள்
- 'கண்ணீரஞ்சலிகள்' வெளியிட்ட அன்புள்ளங்கள்
- பலமைல்களுக்கு அப்பாலிருந்தாலும் அறிந்தறிந்து வந்து ஆறுதல் கூறித் தேற்றிய கலையுலக நண்பர்கள், உறவினர்கள்
- மதச்சடங்குகளைச் செய்த சிவாச்சாரியார்கள்
- இறுதிக் கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் சகலவழிகளிலும் உதவியதுடன் பங்குபற்றியவர்கள்
- இன்றைய அந்தியேட்டி நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும்.


எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றி

அன்னாரது நினைவாக

-குடும்பத்தினர் -

*அச்சுவேலி தெற்கு.*
*அச்சுவேலி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய
எல்லா சக்திகளையும்
ஒன்று சேர்த்து
கடவுளிடம் பிரார்த்தனை செய்.
ஒவ்வொருவரும்
வேலை செய்தே ஆகவேண்டும்.
எந்தவொரு
உழைப்புமில்லாமல்
எதையாவது சாதிக்க முடியுமா?
எண்ணற்ற
வீட்டு வேலைகளுக்கிடையேயும் கூட
ஒருவன் பிரார்த்தனைக்காக
நேரத்தை ஒதுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org